பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

தே.செ.வெ.எண். 76 **நாள்: 10.04.2026**

சென்னை மாவட்டத்தில் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மையங்களான லயோலா கல்லூரி, இராணி மேரி கல்லூரி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் – 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு 23.04.2026 அன்றும், வாக்கு எண்ணிக்கை 04.05.2026 அன்றும் நடைபெறவுள்ளது.

சென்னை மாவட்டத்தில் பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர், ஆயிரம் விளக்கு மற்றும் அண்ணாநகர் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கு லயோலா கல்லூரியிலும், ஆர்.கே.நகர், திரு.வி.க.நகர், இராயபுரம், துறைமுகம் மற்றும் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி ஆகிய 5 சட்டமன்றத் தொகுதிகளுக்கு இராணிமேரி கல்லூரியிலும், விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, தியாகராயநகர், மயிலாப்பூர் மற்றும் வேளச்சேரி ஆகிய 5 சட்டமன்றத் தொகுதிகளுக்கு அண்ணா பல்கலைக் கழகத்திலும் வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு, மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள், இன்று (10.04.2026) லயோலா கல்லூரி, இராணி மேரி கல்லூரி மற்றும் அண்ணா பல்கலைக்கழக வாக்கு எண்ணும் மையங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கும் பாதுகாப்பு அறைகள் (Strong Room), வாக்கு எண்ணிக்கை அறைகள் உள்ளிட்ட தொடர்புடைய அனைத்துப் பணிகளுக்கான ஏற்பாடுகள், ஊடக மையம் அமைத்தல் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., (தெற்கு), கிழக்கு மண்டல காவல் இணை ஆணையாளர் திரு.பண்டி கங்காதர், இ.கா.ப., தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

"தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா"

செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி